இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 10 OCTOBER 2025

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# விசுவாசம்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN



Jesus Lives MINISTRIES
செம்பட்டியில்
அக்டோபர்
10,11
வெள்ளி,சனிக்கிழமை
காலை 9:30 AM முதல்
மதியம் 2:00 PM வரை
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
இடம்:வானத்தின் வாசல்
எழுப்புதல்ஜெபமையம்,
செம்பட்டி, திண்டுக்கல்.
குறிப்பு: திண்டுக்கல் பேருந்து
நிலையத்திலிருந்து பேருந்து வசதி
உண்டு.மேலும் கூட்டம் முடிந்தவுடன்
அனைவருக்கும் மதிய உணவு
வழங்கப்படும்
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449



Jesus Lives MINISTRIES
மதுரையில்
அக்டோபர்
18
சனிக்கிழமை
9:30 AM- 2:00 PM
எழுப்புதல்
உபவாச ஜெபம்
இடம்:
இயேசு அழைக்கிறார்
ஜெபகோபுரம்,
பழங்காநத்தம்,
PRC Depot அருகில்,
மதுரை.
தொடர்புக்கு :94428 00449,94980 00449

# ஆசிரியர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாதஇதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த சில நாட்களாக நாம் அஞ்சல் மூலமாக அனுப்ப முடியாத இந்த மாதஇதழை மிகுந்த பிரயாசத்திற்குப்பின் அதிகமாக ஸ்டாம்ப் ஒட்டி அனுப்ப வேண்டி உள்ளது. காரணம் நம்முடைய பிரிண்டிங் பிரஸ் அட்ரஸ் மாற்றத்தால் அஞ்சலகத்துறையினர் நமக்கு கொடுத்த சலுகையை ரத்து செய்து விட்டார்கள் ஆனாலும் கர்த்தருடைய ஊழியம் தடைபடாது. கடந்த நாட்களில் நடைபெற்ற எல்லா கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து நடத்தினார். குறிப்பாக திருப்பத்தூர் உபவாச முகாமை தேவன் அதிகமாய் ஆசீர்வதித்தார். மேலும் வருகின்ற அக்டோபர் 1,2–ஆகிய தேதிகளில் நம்முடைய வானத்தின் வாசல் எழுப்புதல் சென்டரில் வைத்து சுவிசேஷ ஜெப முகாமை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். இதிலே நானும், அன்பு சகோதரர். வின்சென்ட் செல்வகுமார் அவர்களும் இணைந்து முகாமை நடத்த இருக்கிறோம். நீங்கள் யாவரும் கட்டாயம் இந்த முகாமில் கலந்து கொள்ள வேண்டும். வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மட்டுமல்ல ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமைதோறும் நடைபெறும் உபவாச ஜெபத்தையும் கர்த்தர் அளவில்லாமல் அசீர்வதித்து வருகிறார். தேவனுடைய கிருபையினால் திண்டுக்கல் பேருந்து நிலையத்திலிருந்து காலை 9.30 மணிக்கு விசேஷித்த பஸ் நம்முடைய வானத்தின் வாசல் எழுப்புதல் சென்டருக்கு விடப்படுகிறது, இது நேரடியாக நம்முடைய இடத்திற்கே வந்து விடும் இதனை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபமும் தேவ கிருபையினால் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது. கர்த்தரை அறியாத ஜனங்களை ஒவ்வொரு மாதமும் கர்த்தர் அழைத்து வருகிறார். தொடர்ந்து நம்முடைய மீடியா ஊழியங்களுக்காக, இரவில் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சிகளையும், காலையில் இயேசுவை தினம் பார்ப்போம் நிகழ்ச்சிகளை நீங்களும் பாருங்கள், மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், காணிக்கைகளினாலும் இந்த ஊழியத்தை தாங்க உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.



இயேசுவின் பணியில்

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

# விசுவாசம்



சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதஇதழ் மூலமாக மீண்டும் உங்களைச் சந்திக்க தேவன் தந்த கிருபைக்காக அவருக்கு நன்றி சொல்லுகிறேன்.

**சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார். லூக்கா 18:8**

இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு மீண்டும் வரும்போது உங்களிடத்தில் எதிர்பார்க்கின்ற ஒரு காரியம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா? இரண்டாம் முறையாக இந்த பூமிக்கு அவர் வரும்போது இந்த பூமியிலே ஜனங்களிடத்தில் விசுவாசத்தைக் காண்பாரோ என்று சொல்லப் பட்டுள்ளது. இன்றைக்கு உங்களுக்கு விசுவாசம் தேவையா? அது ஏன் உங்களுக்கு அவசியமென்றால் உங்களுக்கு வரும் போராட் டங்களை, பிரச்சனைகளை நீங்கள் மேற்கொள்ள விசுவாசம் தேவை. ஒவ்வொரு மனிதனுக்கும் விசுவாசம் கண்டிப்பாக தேவை. ஆனால் சாத்தானுக்கு மனிதர்கள் தேவன் மேல் விசுவாசம் வைப்பது பிடிக்காது.

**லூக்கா 22:32-ல் நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன், நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.** இயேசு பேதுருவிடம் நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொள்கிறேன் என்று சொல்லுகிறார். நமக்காக வேண்டுதல் செய்கிற தேவன் இருக்கிறார். இந்த விசுவாசமானது பத்து வெள்ளிக்காசு போன்றது. பத்து வெள்ளிக்காசு என்பது பரிசுத்தம், விசுவாசம், தேவனுடைய வார்த்தை என்று ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டே போகலாம். சாத்தான் வந்து உங்கள் வெள்ளிக்காசை திருடாதபடிக்கு பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஜெபிக்க நினைக்கும் போது அல்லது ஜெபத்திற்காக வெளியே செல்லும்போது சாத்தான் பலவிதமான தடைகளை போராட்டங்களை கொண்டு வருவான். ஆனால் நீங்கள் விசுவாசத்தில் முன்னேறிச் சென்று அவனை மேற்கொள்ள வேண்டும்.

பேதுரு இயேசுவுக்காக தன் உயிரையே கொடுப்பேன் என்று சொன்னவுடன் சாத்தான் அவனுடைய விசுவாசத்தை சோதிக்க ஆரம்பித்து விட்டான். இந்த பத்து வெள்ளிக்காசில் ஒன்றை நான் திருடுகிறேன் என்று சொல்லி அவன் விசுவாசத்தை திருட பார்க்கிறான். ஆனால் ஆண்டவர் பேதுருவின் சூழ்நிலைகளை, இயலாமையை அறிந்த தேவன் நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொள்கிறேன் என்று சொல்லுகிறார். இன்றைக்கு அந்த ஆண்டவர் உங்களுடைய விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு, சாத்தான் திருடாதபடிக்கு உங்களை நேசிக்கிற தகப்பன் கல்வாரி நேசர் உங்களுக்காக வேண்டிக் கொள்கிறார். ஆகவே நீங்கள் ஜெயிப்பீர்கள். சோதனையில் ஜெயம் பெறுவீர்கள். உங்களுக்கு ஒரு வழி திறக்கப் படும். உங்கள் தோல்விகளை ஜெயமாக மாற்றுவார். **2 தீமோத் 1:12-ல் அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன், ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும்**

**காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.** இந்த வசனத்தில் பவுல் அப்போஸ்தலன் சாத்தானுக்கு சவால் விடுகிறார் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன் என்று சொல்லுகிறார்.

## விசுவாசம் உங்களுக்கு எதற்காக வேண்டும்

சிலர் ஒரு தேவையோடு ஜெபிப்பார்கள், இன்னும் சிலர் தாகத்தோடு ஜெபிப்பார்கள் சிலர் இன்னும் தேவனை ஜெபத்தில் தேடனும், அதிகமாக அவரை கிட்டி சேரனும் என்று ஜெபிப்பார்கள். உங்களுக்கு நிறைய பணத்தேவைகள், பொருள் தேவைகள் இருக்கும் அதற்காகவும் ஜெபிப்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் உள்ள துக்கங்கள், போராட்டங்கள் மாறும்படியாக நீங்கள் ஜெபிப்பீர்கள். சிலருக்கு ஜெபத்தில் கேட்ட காரியங்களுக்கு உடனே பதில் வரும், சிலருக்கு சில வருடங்கள் கூட ஆகலாம். எலிசபெத் சகரியா இருவரும் குழந்தைக்காக பல வருடங்களாக ஜெபித்தார்கள். ஏறக்குறைய 84 வயதில் அவர்களுக்கு அந்த ஜெபத்திற்கு பதில் கிடைத்தது. இன்றைக்கு உங்களுடைய ஜெபம் கேட்கப்படவில்லை என்றால் ஆண்டவர் மீதுள்ள உங்களுடைய நம்பிக்கை தளர்ந்து போக ஆரம்பிக்கும், விசுவாசம் குறைய ஆரம்பிக்கும். கர்த்தர் கண்டிப்பாக உங்களுக்கு தருவார் என்ற நம்பிக்கையில், விசுவாசத்தில் இருங்கள். நிச்சயமாக உங்களுக்கு பதிலை தருவார். உங்கள் விசுவாசத்தை குறைந்து போக அவர் விடமாட்டார்.

அதனால் தான் வசனம் சொல்லுகிறது **விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று.** பிசாசானவன் இந்த பத்து வெள்ளிக்காசில் ஒன்றான விசுவாசத்தை நம்மை விட்டு எடுத்து போடப்பார்ப்பான். உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லை என்று நீங்கள் சோர்ந்து போகிறீர்கள் ஆண்டவர் உங்களை பார்த்து சொல்லுகிறார் அவர் மீது விசுவாசம் வையுங்கள் என்று. நீங்கள் ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்கும்போது அநேக நன்மைகள், அநேக ஆசீர்வாதங்கள், அநேக வாசல்களை உங்களுக்காக தேவன் திறப்பார். உங்கள் ஆத்துமா சோர்ந்து போகும் போது சங்கீதக்காரன் சொல்லுகிறார் **சங் 62:5-ல் என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும் என்று.**

இன்றைக்கு அநேகருடைய விசுவாசம், நம்பிக்கை குறைந்து போகத் தொடங்கி விட்டது. கானாவூர் கல்யாண வீட்டில் வெறுமையான கச்சாடிகள் தான் இருந்தது. இன்றைக்கு அநேகருடைய விசுவாசம் வெறுமையானதாக இருக்கிறது. விசுவாசம் இல்லாத வெறுமையான கச்சாடியாக தான் இருக்கிறது. இயேசு சொல்லுகிறார் மார்த்தாளைப் பார்த்து நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று.

## கடுகளவு விசுவாசம்

உங்களை தேவன் கனத்துக் குரியவர்களாக மாற்ற வேண்டுமானால் உங்களுடைய விசுவாசம் பெரிதாக இருக்க வேண்டும். நீங்கள் விசுவாசிக்கிற ஆண்டவர் யார் என்று உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களுக்கு 40 வருடங்களாக வனாந்தரத்தில் மூன்று நேரம் உணவு கொடுத்து வழி நடத்தின தேவன் என்பதை நீங்கள் மறந்து போகாதீர்கள். உங்களுக்கு இருக்கின்ற வேலைப்பளு, கடன் தொல்லை, வருமானம் இல்லை இப்படிப்பட்ட இந்த உலகத்தில் நீங்கள் சூழ்நிலையைக் கண்டு பதறுகிறீர்களா?, கலங்குகிறீர்களா? உங்களுடைய விசுவாசம் காணாமல் போய்விட்டதா? தொலைந்து போய்விட்டதா? உங்கள் நம்பிக்கை தளர்ந்து போய் விட்டதா? உங்கள் அடிகள், கால்கள் சறுக்குகிறதா? தேவன் உங்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கச் செய்வார், உங்கள் ஜெபத்திற்கு தேவன் இன்றைக்கு பதில் தருவார்.

அன்னாள் ஒவ்வொரு வருடமும் ஆலயத்திற்குச் சென்று குழந்தைக்காக ஜெபித்து வந்தாள், ஒன்றும் கிடைக்கவில்லை துக்க முகமாகவே இருந்தாள். ஒரு நாள் தன் இருதய-த்தை ஊற்றி தேவசமுகத்தில் கண்ணீரோடு ஜெபித்தாள். தேவன் அவள் இருதயத்தில் விசுவாசத்தை கொடுத்தார் அதற்குப் பிறகு அவள் துக்கமுகமாய் இருக்கவில்லை. உங்களுக்குள்ளும் தேவன் கடுகளவு விசுவாசத்தை வைக்கிறார். உங்களை துக்கப் படுத்துகிற காரியங்களை உங்களை விட்டு தேவன் அப்புறப்படுத்துகிறார். உங்கள் துக்கத்தை

சந்தோஷமாக தேவன் மாற்றுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமிடம் உன் பிள்ளையை தகனபலியாக பலியிடு என்று சொல்லி விட்டார். அவன் உள்ளத்தில் அதை குறித்து அழுதாலும், ஆபிரகாம் சந்ததி இல்லாமல் அழிந்து போய் விடக்கூடாது என்பதற்காக ஆண்டவர் அவனுக்குள்ளாக கடுகளவு விசுவாசத்தை வைத்து விட்டார். ஆபிரகாம் தன் வேலைக்காரர்களிடம் நாங்கள் இருவரும் அந்த மலைக்கு போய் விட்டு திரும்ப வருவோம் என்று சொன்னார். கர்த்தர் மேல் உள்ள அவனுடைய விசுவாசம் அவனை தடுமாற விடவில்லை. இன்றைக்கு சாத்தானுடைய வேலையே நீங்கள் தேவன் மேல் விசுவாசம் வைக்கக் கூடாது. அவரை விட்டு பின்வாங்கி விடவேண்டும், உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் பின்னோக்கி செல்ல வேண்டும் என்பது தான். கடுகளவு விசுவாசம் உங்களுக்குள் இருந்தால் நீங்கள் பின்னோக்கி செல்ல மாட்டீர்கள். கர்த்தரிடத்தில் முன்னோக்கி செல்வீர்கள். ஆபிரகாமை அப்படித்தான் அவர் முன்னோக்கி செல்ல வைத்தார். விசுவாசத்தில் முன்னேற வைத்தார். விசுவாசத்தின் தகப்பன் ஆக்கினார்.

நீங்கள் இரட்சிக்கப்படும் போது தேவன் உங்களுக்குள் ஆவியின் கனிகளை தருகிறார் அதில் ஒன்றுதான் விசுவாசம்.

**மாற்கு 11:23,24-ல் எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுகொள்வோம் என்று விசுவாசியுங்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. உங்கள் வாழ்க்கையில் உள்ள போராட்டங்களை, பிரச்சனைகளை பார்த்து நீ போ என்று சொல்லி விசுவாசத்தோடு கட்டளையிடுங்கள். அது உங்களை விட்டு அகன்று போகும். உங்கள் வாழ்க்கையில் உள்ள தோல்விகள் ஜெயமாக உங்களுக்கு தேவை விசுவாசம். இதுவரைக்கும் உங்கள் வாழ்க்கையில் தாமதித்த காரியங்களை எல்லாம் ஆண்டவர் நிறைவேற்றி தரப்போகிறார். தடைப்பட்ட காரியங்கள், அடைக்கப்பட்ட வழிகளை எல்லாம் தேவன் திறப்பார். உங்கள் குடும்பத்தின் மீது, உங்கள் தொழிலின் மீது பிசாசுக்கு எந்த விதத்திலும் அதிகாரம் கிடையாது. உங்கள் குடும்பம் கர்த்தரால் கட்டப்படும். தேவனுடைய கை உங்களோடு இருக்கிறது என்று விசுவாசியுங்கள். நீங்கள் சோர்ந்து போன நேரத்தில் தேவன் உங்களுக்குள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவார்.

**லூக்கா 17:5-ல் அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்றார்கள்.** இப்பொழுது நீங்கள் போய்க் கொண்டிருக்கிற இந்த சூழ்நிலையில் உங்களுக்குள் இருக்கிற விசுவாசம் போதாது. இயேசுவிடம் உங்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுங்க அப்பா என்று நீங்கள் கேட்க வேண்டும். விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம் என்று பவுல் எழுதுகிறார். உங்கள் விசுவாசத்தை சேதப் படுத்துகிறவனை நீங்கள் சேதப்படுத்த வேண்டும். நீங்கள் எதிர்பார்த்து நிற்கும் காரியங்களை தேவன் உங்களுக்கு வாய்க்கப் பண்ணுவார்.

## விசுவாச குறைவு

நீங்கள் விசுவாசத்தில் குறைவுபடத் தொடங்கும் போது கர்த்தரை தேடுவதிலும், அவரை நேசிக்கிறதிலும் குறைவு காணப்படும்.

**யோவான் 11:21-ல் மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து, ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்** என்று முறையிடுகிறாள். லாசரு நோய்வாய் பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தபோது எந்த நேரத்திலும் எது வேண்டுமானாலும் நடக்கும் என்ற சூழ்நிலையில் இருந்தபோது மார்த்தாள், மரியாள் இயேசுவுக்கு சொல்லி அனுப்பினார்கள் இயேசு இவர்கள் சொல்லி அனுப்பின வார்த்தைகளை கேட்டுவிட்டு அங்கேயே மேலும் இரண்டு நாள் தங்கி விட்டார். அதற்குள்ளாக லாசரும் மரித்துப் போய்விட்டார். அடக்கம் பண்ணி விட்டார்கள். நான்கு நாட்கள் கழித்து இயேசு அந்த இடத்திற்கு வந்தபோது ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க

மாட்டான் என்று மார்த்தாள் சொன்னாள். சில நேரங்களில் உங்கள் வாழ்க்கையில் நடக்கும் காரியங்கள் உங்களை மிகவும் சோர்ந்து போக வைக்கிறது. அதை போல தான் இங்கு மார்த்தாளும் இயேசுவின் வருகை தாமதமானதால் சோர்ந்து போய்விட்டாள். இரண்டு நாட்கள் முன்பாக வந்திருப்பீரானால் கூட நன்றாக இருந்திருக்கும். ஆனால் இப்பொழுது அவன் மரித்து நான்கு நாட்கள் ஆகிவிட்டதே என்று சொல்லுகிறாள்.

மாற்கு 9:19-ல் அவர் பிரதியுத்தரமாக, **விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்.** கடுகளவு விசுவாசம்கூட இல்லாத சந்ததியே எதுவரைக்கும் நான் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன் என்று சொல்கிறார். மார்த்தாள், மரியாளுடைய விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு தேவன் அவர்களுக்கு ஏற்பட்ட அந்த தீமையை நன்மையாக மாற்றினார். ஆண்டவர் பொறுமையாக இருந்து மார்த்தாள், மரியாளைத் தைரியப்படுத்தினார். இன்றைக்கு அநேகர் உங்களுக்கு ஏற்ற மாதிரி ஜெபிக்கிறீர்கள். மார்த்தாளுடைய ஜெபம் நீர் நான்கு நாட்களுக்கு முன்பாக வந்திருப்பீரானால் இது நடந்திருக்காது. இனி நீர் வந்தால் என்ன, போனால் என்ன என் சகோதரன் மரித்துப்போய் விட்டானே என்று கலங்கினாள். ஆனால் இயேசு அவளை கல்லறையினிடத்தில் அழைத்துச் சென்று, இந்த கல்லை புரட்டித் தள்ளுங்கள் என்று சொல்லி அவள் சகோதரனை உயிரோடு எழுப்பி தந்தார்.

சிலருடைய ஜெபங்கள் ஆண்டவருக்கு பிரியமானதாக இல்லை, ஏனென்றால் அவர்களிடத்தில் விசுவாசம் இல்லை. மார்த்தாளுடைய ஜெபமும் அப்படித்தான் இருந்தது. நீர் நான்கு நாட்களுக்கு முன்பாக வந்திருக்க வேண்டும். என் சகோதரனை எழுப்பி இருக்க வேண்டும். முன்பே வந்திருப்பீரானால் இப்படி நடந்திருக்காது என்று சொன்னாள். இயேசு நான்கு நாட்களுக்கு முன்பாகவே வந்திருந்து லாசருவை உயிரோடு எழுப்பி இருப்பாரானால் யூதர்கள் ஒருவர் கூட அவரை நம்பி இருக்க மாட்டார்கள். அவர்களும் விசுவாசிக்கும் படியாகத்தான் இயேசு நான்கு நாட்கள் கழித்துவந்து தேவனுடைய மகிமை வெளிப்படச் செய்தார். **ஓசியா 6:2-ல் இரண்டுநாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார், அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்** என்று சொல்லப்பட்டுள்ளது. மரித்துப்போன ஒரு ஆவி மீண்டும் அந்த சரீரத்துக்குள் வருவதற்கு 72 மணி நேரத்துக்குள் முயற்சி செய்யுமாம். இது யூதர்களுடைய கணிப்பு. அதனால்தான் இயேசு மூன்றாவது நாள் வராமல் நான்காவது நாள் அங்கே வந்தார். அவர்களுடைய மூடநம்பிக்கை களை எல்லாம் தகர்த்து போடும்படியாக இயேசு பெத்தானியாவுக்கு வந்தார்.

எலியாவின் விசுவாசத்தை பாருங்கள் என்னுடைய வாக்கினால் அன்றி இந்த தேசத்தில் மழையோ, பனியோ பெய்யாது என்று கட்டளையிட்டான். அவன் சொன்னபடியே மூன்று வருஷமும் ஆறு மாதமும் மழையோ பனியோ அந்த தேசத்தில் பெய்யவில்லை. அந்த நாட்டின் ராஜா ஆகாப் எலியாவை அழைத்து என் தேசத்தில் மழை பெய்யும்படியாக நீ ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார். அப்பொழுது எலியா நீ உன் தேசத்தில் உள்ள பாகாலின் விக்கிரக தோப்புகளையும் அழித்து விட்டு தேவனுக்கு பிரியமானவராய் மாற வேண்டும் என்றான். பாகாலின் தீர்க்கதரிசிகள் பாகாலை நோக்கி கூச்சலிட்டுத் தங்களைக்கீறி கொள்ளுகிறார்கள் ஆனால் அங்கிருந்து எந்த ஒரு பதிலும் அவர்களுக்கு வரவில்லை. ஆனால் எலியா தேவனை நோக்கி நான் உம்முடைய பிள்ளை என்றும் நீர் ஜீவனுள்ள தேவன் என்று இந்த ஜனங்கள் அறியும்படியாக இன்றைக்கு என் ஜெபத்தை கேட்டருளும் என்று சொல்லி ஜெபித்தார். ஜெபித்த உடனே வானத்திலிருந்து அக்கினி வந்து அனைத்தையும் பட்சித்து போட்டது. கர்த்தரே தெய்வம் என்று எல்லா ஜனங்களும் அறிந்து கொண்டார்கள். கர்த்தர் எலியாவின் ஜெபத்திற்கு பதில் தந்தார். அவர் ஜெபித்த போது உள்ளங்கையளவு மேகம் வந்தது. எலியாவின் விசுவாசம் தளர்ந்து போக தேவன் விடவில்லை.

ஆனால் 19 ஆம் அதிகாரத்தில் அவர் நான் ஏன் வாழ வேண்டும் என்று சொல்லி சோர்ந்து போகிறார். ஆகாபின் மனைவியாகிய யோசபேல் எலியாவின் தலையை வாங்க வேண்டும் என்று சொல்லி தீவிரமாய்

செயல்பட்டார். இந்த செய்தியை அறிந்த எலியா மிகவும் சோர்ந்து போய் ஒரு சூரைச் செடியின் கீழே உட்கார்ந்து ஆண்டவரே நான் வாழ்வதை காட்டிலும் மரித்துப் போவது நலம் என்று சொல்லி கொண்டிருந்தார். இதைப் போலத்தான் அநேகருடைய இருதயத்தில் இருந்து விசுவாசமும் வருகிறது அவிசுவாசமும் வருகிறது. எலியாவும் கூட ஒரு முறை விசுவாசத்தோடு தேவனுக்காக பெரிய காரியங்களை செய்தவர். ஒரு சூரைச் செடியின் கீழே அமர்ந்து நான் வாழ்ந்தது போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என் பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவன் அல்ல என்று சொல்லி ஜெபிக்கிறான். எலியாவின் விசுவாசம் தளர்ந்து. அவர் சோர்ந்து போனதை அறிந்த தேவன் அவரை தூதனை கொண்டு தேற்றுகிறார். எலியா ஜெபித்தது போல நீங்கள் ஜெபிக்க கூடாது. அநேக நேரங்கள் ஜெபத்தில் பதறி ஜெபிக்கிறீர்கள். அப்படிப்பட்ட ஜெபத்தை செய்யக்கூடாது.

இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் உங்கள் ஜெபத்திற்கு பதில் வரவில்லை. ஒரு காரியம் நடக்கவில்லை என்றால் உடனே நீங்கள் சோர்ந்து போகிறீர்கள் எலியாவின் வாழ்க்கையிலும் இப்படித்தான் சோர்வு வந்துவிட்டது. ஆனால் தேவன் அவரை விட்டு விடவில்லை. அவரைத் தேற்றி. அவர் செய்ய வேண்டிய காரியங்களை அவரைக் கொண்டே செய்து முடித்தார். ஆண்டவர் அவிசுவாசத்தில் போராடுகிற நம்மை அப்படியே கைவிட்டு விடமாட்டார். நம்மை தட்டி எழுப்பி தேற்றி. தைரியப்படுத்தி முன்னேறிச் செல்ல வைப்பார். ஆனால் சாத்தான் உங்களை ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்தை. நம்பிக்கையை தளர வைப்பான். அவனுக்கு இடம் கொடுக்கக் கூடாது வசனம் தெளிவாக சொல்லுகிறது **ரோமர் 14:1-ல் விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள். ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக் காமலிருங்கள் என்று.** நீங்கள் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களாய் இருக்க தேவன் விரும்பவில்லை. மார்த்தாள் அன்றைக்கு விசுவாசத்தில் பலவீனமுள்ளவளாக இருந்ததால் தான் நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்று சொல்லுகிறாள். அப்படி நீங்கள் இருக்கக் கூடாது.

ஒரு வீடு இருக்கா? ஒரு பொருள் ஆசைப் பட்டதை வாங்க முடியுதா? என்று புலம்புவீர்கள். ஆனால் அவசரப்பட்டு எதையும் வாங்க கூடாது. நீங்கள் விசுவாசியாக இருந்தாலும் கையில் பணம் இருந்தாலும் கர்த்தருக்கு காத்திருந்து. உம்முடைய சித்தமா என்று கேட்டு வாங்க வேண்டும். கர்த்தருக்கு சித்தமில்லாத எதையும் அவசரப்பட்டு வாங்க கூடாது. விசுவாசத்தினால் வராத எல்லாம் பாவம் தான். **ரோமர் 14:23-ல் விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே** என்று சொல்லப் பட்டுள்ளது. கர்த்தருடைய ஆசீர்வாதம் ஐசுவரியத்தை கொண்டு வரும். அதோடே அவர் வேதனையை கூட்டார். தேவன் வானத்திலிருந்து ரதத்தை அனுப்பி எலியாவை உயிரோடு கூட்டிட்டு போனார். நம்மை கூட்டிட்டு போக பரலோகத் திலிருந்து ரதங்கள் வரப்போகிறது.

மோசே 24 லட்சம் ஜனங்களை நடத்தினார். இஸ்ரவேல் ஜனங்கள் நடந்து போகையில் பகலில் குளிர்ந்த நிழலாக, மேகஸ்தம் பமாகவும். இரவில் அக்கினிஸ்தம்பமாக. கர்த்தரே நித்திய வெளிச்சமாய் இருந்தார். அப்படி நடத்திப் போய்க் கொண்டிருக்கும் போது எவ்வளவு பிரச்சனை. பிரயாணத்தில் தடைகள். போராட்டங்கள் வந்தது. மோசே ஆண்டவரை நோக்கி முறையிடுகிறான். **எண் 11:12-ல் அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி. நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால். உமது அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன? இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டு போவதுபோல, உன் மார்பிலே அணைத்துக் கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ?** என்று மோசே புலம்புகிறான். **யோவான் 11:21,22-ல் ஆண்டவரே. நீர் இங்கேயி ருந்தீரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்.** நீங்கள் தேவனிடத்தில் கேட்கிறதை அவர் கொடுப்பார், உங்களுக்குத் தருவார். ஆண்டவர் உங்கள் சூழ்நிலையை மாற்ற முடியும். உங்களுக்கு விரோதமான காரியங்களை நன்மையாக மாற்ற முடியும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஆண்டவர் மோசேயை பெலப்படுத்தி அவனை கொண்டு தான் மகிமையான காரியங்களை செய்தார். அந்த தேவன் இன்றைக்கு உங்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கச் செய்து. மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக உங்களை பயன்படுத்துவாராக.



# சீயோனே! தேவன் உன்னை தெரிந்து கொண்டார்



சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். மீண்டும் உங்களை இந்த செய்தியின் வழியாக சந்திக்க செய்த தேவனுக்கு நன்றி.

யூதா கோத்திரத்தையும் தமக்கு பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்து கொண்டார் என்று சங் 78:68-ல் சங்கீதக்காரன் சொல்லுகிறதை வாசிக்கிறோம். சங் 74:2-ல் நீர் பூர்வ காலத்தில் சம்பாதித்த உன் சபையையும், நீர் மீட்டுக்கொண்ட உமது சுந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும் என்கிறதை வாசிக்கிறோம். தமக்கு பிரியமான சீயோன், தாம் வாசம் பண்ணுகிற சீயோன் என்று ஆண்டவர் நம்மைப் பார்த்து சொல்லுகிறார். சீயோன் கோட்டை என்றும், சீயோன் பர்வதம் என்றும், சீயோன் மலை என்றும் அர்த்தம் கொள்ளுகிற காரியங்களை வேதம் சொல்லுகிறது.
2 சாமு 5:6,7-ல் தாவீது சீயோன் கோட்டையை பிடித்தான் என்றும் சங் 48:2 சீயோன் பர்வதம் வடிப்பான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. இதுவே மகாராஜாவின் நகரம் என்றும்,
எபி 12:22-24-ல் நீங்கள் சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும்...... வந்து சேர்ந்தீர்கள் என்றும், பரம சீயோன் பரலோகத்திற்கு அடையாளமாகவும் இன்னும் ஏசா 30:19 சீயோனை சேர்ந்த ஜனங்கள் எருசலேமில் வாசமாயிருப்பார்கள் என்று ஆண்டவருடைய மக்களை அடையாளப் படுத்துகிறது.

பரலோகத்திற்குப் போக ஆயத்தப்படுகிற ஆண், பெண், பிள்ளைகள் யாராயிருந்தாலும் அவர்கள் தான் சீயோன்.

நீங்கள் சீயோனா! யோவான் 1:12-ல் (இயேசு) அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக் கொள்ளுகிற யாவரும் அவருடைய பிள்ளைகள்! அவர்கள் தான் சீயோன். மத் 21:4-ல் இதோ என் ராஜா சாந்தகுணமுள்ளவராய் கழுதையின் மேலும், கழுதை குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்கு சொல்லுங்கள் என்று. நம்முடைய ராஜா நம்மிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்கு சொல்லுங்கள் என்கிறார். அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சீயோன்! அவர் வாசம் பண்ணுகிற சீயோன். இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்போம்?

## அழகே இல்லை

அழகான சீயோன் அழகு இழந்ததாய் காணப்படுகிறது. புல 1:6-ல் சீயோன் குமாரத்தியின் அழகெல்லாம் அவளை விட்டுப் போயிற்று, அவள் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி, தொடருகிற வனுக்கு முன்பாகச் சத்துவமில்லாமல் நடந்துபோனார்கள். அழகெல்லாம் அவளை விட்டு போயிற்று என்றால் ஏற்கனவே அவள் அழகாக இருந்தவள், ஏன் அழகு போனது?. எசே 16:14,15 தேவன் நம்மை வைத்த மகிமையினால் அந்த அழகு குறைவற்றதாய் இருந்தது. ஆனால் அழகை நம்பி சோரமார்க் கமாய் நடந்து வேசித்தனம் பண்ணினாய் என்று தொடர்ந்து உள்ள வசனங்களில் எல்லாம் வாசிக்கிறோம். தானி 4:30 இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன்

அல்லவா என்று சொன்னான். இந்த வார்த்தை நேபுகாத்நேச்சார் வாயிலிருக்கும் போதே மனுஷரிலிருந்து தள்ளப்பட்டு மிருகத்தைப் போலானான். அழகான முகம் மாட்டை போல மாறியது. அவன் இருதயம் மிருகமாக, கடினமாக மாறியது. தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப் போல, நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப் போல பார்க்கவே அலங்கோலமாய், அருவருப்பாய் மாறிப் போனான். ஏசா 3:16 சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து கழுத்தை நெரித்து நடந்து கண்களால் மருட்டிப்பார்த்து ஒய்யாரமாய் நடந்து தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள். இந்த அகந்தை நம்மை அலங்கோலமாய், அருவருப்பாய் மாற்றிவிடும்.

பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது 2 தீமோ 3:2 கடைசி நாட்களில் அகந்தையுள்ளவர்களாய், தூஷிக்கிறவர்களாய், தாய் தகப்பன்மாருக்கு கீழ்படியாதவர்களாய், நன்றியறிதல் இல்லாதவர்களாய், பரிசுத்தமில்லா தவர்களாய் இருப்பார்கள் என்றார். அதைப் போலத்தான் இந்த கடைசி நாட்களில் உள்ள மனிதர்களைப் பார்க்கிறோம். நீதி 8:13 தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம், பெருமையையும், அகந்தையையும், தீயவழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன் என்கிறார். அகந்தை, பெருமை ஆண்டவர் வெறுக்கிற, எதிர்க்கிற ஒரு காரியம். நீதி 29:23 மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும் என்று சாலமோன் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சார் போன்று அகந்தையாய் நடக்கிறவர்களை தாழ்த்த அவரால் ஆகும். புல 1:17 சீயோன் தன் கைகளை விரிக்கிறாள், அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை, கர்த்தர் யாக்கோபின் சுற்றுப்புறத்தாரை அவனுக்குச் சத்துருக்களாகக் கட்டளையிட்டார், அவர்களுக்குள்ளே எருசலேம் தூரஸ்திரீக்கு ஒப்பானாள் தீட்டுப்பட்டு போனாள். இருதயத்திலிருந்து புறப்படுகிறது மனுஷனை தீட்டுப்படுத்தும் என்று இயேசு சொன்னார். ஏதோ ஒரு பாவம் உங்கள் அழகை கெடுத்து, நற்பெயரை கெடுத்து, அலங்கோலமாக்கி விட்டதா? அழகே இல்லை உருகுலைந்து அருவருப்பாய் போய் விட்டீர்களா? உங்களை நேசிக்கிற தேவன் உண்டு. அவர் இயேசு. சிலுவைக்கு முன்பாக வந்து உங்களை தாழ்த்தி இயேசுவே எனக்கு இரங்கும் என்று சொல்லுங்கள் உங்களுக்கு இரங்குவார்.

## காயப்பட்டது

சீயோன் அழகில்லாமல் இருந்ததற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. புல 2:13 சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே நான் உன்னை தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர் சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத் தைப்போல் பெரிதாயிருக்கிறதே உன்னை குணமாக்குகிறவன் யார்? என்று வாசிக்கிறோம். மனிதரால் காயப்படுத்தப்பட்ட மக்கள் உண்டு. கணவரால், பிள்ளைகளால், சமுதாயத்தால் பாதிக்கப்பட்டு ஏதோ ஒரு காயம்! காரணம் இல்லாத, தேவையில்லாத காயம். 2 நாளா 35:25 எரேமியா யோசியாவின் மேல் புலம்பல் பாடினான். சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின் மேல் பாடுகிறார்கள். அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதி இருக்கிறது எரேமியா யோசியா ராஜாவைக்குறித்து தான் பாடினான். இவன் கர்த்தருக்கு பயந்து செம்மையாய் வாழ்ந்தவன் தான். தேவையில்லாத யுத்தங்களை செய்து காயப்பட்டு விட்டான். நீங்களும் கூட தேவையில்லாத காரியத்தில் ஈடுபட்டு காயப்பட்டு விடுகிறீர்கள் அல்லவா? உன் காயம் கொடியது சமுத்திரத்தைப் போல் பெரிதாயிருக்கிறது! உன்னை குணமாக்குகிறவன் யார்? காயப்படுத்தப்பட்டு ஏதோ ஒரு பாரம், கவலை கண்ணீர், அழகு போய் தீட்டுப்பட்டு யார்? எனக்கு உதவுவார் என்று கைகளை சீயோன் விரிக்கிறாள். அவளைத் தேற்றுகிறவர் ஒருவரும் இல்லை.

இப்படி கைவிடப்பட்டு மனம் நொந்து வேதனையோடு இருக்கிறவர்களைப் பார்த்து எரே 30:17-ல் அவர்கள், உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
எருசலேமிலிருந்து எரிகோவிற்கு ஒரு மனிதன் இறங்கிப் போகையில் கள்வர் கையில்

அகப்பட்டான். லூக் 10:30-34-ல் நல்ல சமாரியனாய் இயேசு வந்து அவன் காயங்களில் எண்ணெயையும் திராட்சை ரசமும் வார்த்து காயங்களை கட்டி அவனை தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி சத்திரத்திற்கு கொண்டு போய் பராமரித்தார் என்று வாசிக்கிறோம். அவர் இயேசு! ஏதோ ஒரு காரியத்தில் காயப்பட்டு நிற்கிற உங்களையும் இயேசு கைவிடாமல் தூக்கி எடுத்து காயங்களை ஆற்றுவார். தேற்றுவார். இல்லாமல் கைகளை விரிக்கிற உங்களை தேற்றுவார். ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல நான் உங்களை தேற்றுவேன் என்று சொன்னவர் உங்களை கைவிடமாட்டார். சங் 147:3 இருதயம் நொறுங்குண்டவர்களை குணமாக்குகிறார் அவர்களுடைய காயங்களை கட்டுகிறார் என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம். ஆண்டவர் இன்னும் என்ன செய்கிறார்.

## கழுவுகிறார்

ஏசா 4:3,4 ஆண்டவர் சீயோன் குமாரத்தியின் அழுக்கை கழுவி, நியாயத்தின் ஆவியினாலும் சுட்டெரிப்பின் ஆவியினாலும் எருசலேமின் இரத்தப்பழிகளை நீக்கிவிடும் போது சீயோனின் மீதியாயிருந்து எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேர் எழுதப் பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப் படுவான். அழகில்லாமல் தீட்டுப்பட்டு, காயப்பட்டு நிற்கிற சீயோனின் அழுக்கை கழுவி, சுட்டெரிப்பின் ஆவியில் சுத்திகரித்து பரிசுத்தம் என்ற பெயர் பெரும்படி சுத்தமாக்குகிறார். தாவீது என் அக்கிரமம் நீங்க என்னை கழுவி, பாவமற என்னை முற்றிலும் சுத்திகரியும் என்கிறான். யோவான் 13:8 பேதுருவைப் பார்த்து நான் உன்னை கழுவாவிட்டால் என்னோடு உனக்கு பங்கில்லை என்றார். ஆண்டவர் சீயோன் குமரத்தியாகிய நம்மை கழுவ வேண்டும். பரிசுத்தம் பண்ணி அவரோடு பங்குள்ளவர்களாய் மாற்ற வேண்டும்.

## பலன் தருகிறார்

சீயோன் குமாரத்தியை நோக்கி, இதோ, உன் இரட்சிப்பு வருகிறது, இதோ, அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது என்று சொல்லுங்கள் என்று, கர்த்தர் பூமியின் கடையாந்தரம் வரைக்கும் கூறுகிறார் ஏசா 62:11 ஆண்டவர் நம்மை கழுவி இரட்சித்து அவர் பிள்ளையாய் மாற்றுகிறது மட்டுமல்ல அவர் அருளும் பலன் அவரோடு வருகிறது. ரூத் தன் மாமியை பின்பற்றி மோவாபிலிருந்து எருசலேமுக்கு வந்து விட்டாள். அதைக் கேள்விப்பட்ட போவாஸ் நீ உன் மாமிக்கு செய்ததையும், உன் தேசத்தை விட்டு நீ அறியாத இந்த ஜனங்களிடத்தில் வந்தது எனக்கு தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனை கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான். அவள் நடந்த செய்கைக்குத்தக்க பலன் அளித்த தேவன் நம்மை மறந்து விடுவாரா? ஆண்டவர் மேல் நாம் அன்பு வைத்து அவருக்காக செய்து வருகிற ஒன்றையும் அவர் மறக்காமல் ஏற்ற பலனை கட்டாயம் தருவார். ரூத்திற்கு அவள் நினைத்து பார்த்திராத பலன் கிடைத்தது அதைப்போல நமக்கும் தருவார்.

## நமக்காக யுத்தம் பண்ணுவார்

கர்த்தர் என்னுடனே சொன்னது, சிங்கமும் பாலசிங்கமும் தங்கள் இரையைப் பிடித்திருக்கும்போது கெர்ச்சித்து, தங்களுக்கு விரோதமாய்க் கூப்பிடுகிற திரளான மேய்ப்பரின் சத்தத்தினாலே கலங்காமலும், அவர்கள் அமளியினாலே பணியாமலும் இருக்கிறதுபோல, சேனைகளின் கர்த்தர் சீயோன் மலைக்காகவும், அதின் மேட்டுக்காகவும் யுத்தம்பண்ண இறங்குவார். பறந்து காக்கிற பட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார், அவர் அதைக் காத்துத் தப்பப்பண்ணுவார், அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார் ஏசா 31:4,5. நமக்கு விரோதமாய் எத்தனையோ எதிர்ப்புகள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள் போராடுகிறதை பார்க்கிறோம். கர்த்தர் நமக்காக அந்த நேரத்தில், சிங்கம் யாருக்கும் பயப்படாமல் பணியாமல் இருக்கிறதுபோல கர்த்தர் நம் எதிராளிகளோடு யுத்தம் செய்ய இறங்குவார். பறந்து காக்கிற பட்சியைப்போல இறங்கி வந்து நம்மை காத்து தப்பப்பண்ணி நமக்கு ஆதரவாக இருப்பார்.

## இழந்த ஆளுகையை தருவார்

நொண்டியானவளை மீதியான ஜனமாகவும், தூரமாய்த் தள்ளுண்டு போனவளைப் பலத்த ஜாதியாகவும் வைப்பேன், அவர்கள் பேரில் கர்த்தர் சீயோன் பர்வதத்திலே இதுமுதல் என்றென்றைக்கும் ராஜாவாயிருப்பார். மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும் மீகா 4:7,8. நம் ஆண்டவர் இழந்த எல்லாவற்றையும் நமக்கு தருகிறவர். முந்தின ஆளுகையை, இழந்த ஆளுகையை தந்து நமக்கு என்றென் றைக்கும் ராஜாவாயிருப்பார் நம்மை ஆளுகை செய்வார். நேபுகாத்நேச்சார் எவ்வளவு பெரிய மேன்மையாய் இருந்தான். நான் கட்டின மகா பாபிலோன் என்று இருதயத்தில் பெருமைக்கு இடம் அளித்த போது ஆளுகையிலிருந்து தள்ளப்பட்டு மாட்டை போல புல்லை மேய்ந்தான். மந்திரி மார்ரெல்லாம் அவனை விட்டு போய்விட்டார்கள். ஆனால் நொண்டி யானவளை, தூரமாய் தள்ளுண்டு போனவளை சேர்த்துக்கொண்டு பலத்த ஜாதியாக வைக்கிற கர்த்தர் தம்முடைய ஆளுகையை நோக்கி பார்க்க வைத்து அவன் புத்தியை அவனுக்கு திரும்ப கொடுத்து, அவனை விட்டுப் போன ஆளுகையை, முகக்களையை, மந்திரி மார்களை திரும்ப வரச்செய்தார். ராஜ்யத்திலே ஸ்திரப்பட்டான். அதைப்போல எல்லாவற்றையும் இழந்து விட்டேன் என்று கலக்கத்தோடு இருக்கிறீர்களா? உங்களை தாழ்த்தி தேவனை நோக்கி பார்த்தால் அந்த ஆளுமையை தருவார். கர்த்தர் நம் ராஜாவாக இருந்து நம்மை ஆளுகை செய்வார். ஆண்டவர் நமக்கு மேலே சொல்லப்பட்ட இதெல்லாம் செய்வார். சீயோனாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?

## சீயோன் குமாரத்தியே எழுந்து போராடி

ஆண்டவர் நாம் செய்யும்படியான வேலையை சொல்லுகிறார். மீகா 4:13. சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி, நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன், நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய், அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக் கிறவருக்கென்றும் நியமிப்பாய் என்கிறார் நீ போரடி. நான் உன் கொம்புகளை இரும்பும் உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன் என்று ஆண்டவரும் நம்மோடு இணைந்து கொள்கிறார். ஏசா 41:15 இதோ, போரடிக் கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மை யுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன், நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய். நான் உன்னை பயன்படுத்துவேன், இந்த காலத்தில் மிகதுரிதமாய் செயல்பட பலவித இயந்திரங்கள் வந்துவிட்டது. போரடிக்கிற அந்த வேகத்திற்கு நம்மை நடத்துகிறவர் நம்மோடு இருக்கிறார். மீதியானியர் கோதுமையை, இஸ்ரவேலை அழித்து கெடுக்கும் போது கொஞ்சம் கோதுமையை காப்பாற்ற தான் கிதியோன் போரடித்தான் என்று நியா 6:11,12 அப்படி சொல்லுகிறது. ஆனால் அவனை, முழு இஸ்ரவேலை இரட்சிக்கும் இரட்சகனாக தேவன் எழும்பினார். நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கிற போது குடும்பம், திருச்சபை, தேசம் இரட்சிக்கப்படும். ஆண்டவர் பலத்த அறுவடையை தருவார். தாவீது ஜனங்களை என்ன பார்த்து தேவகோபத்திற்கு ஆளான போது 1 நாளா 21:20 ஓர்னான் போரடித்து கொண்டிருந்தான். இதைப் பற்றி 2 சாமு 24:16-லும் வாசிக்கிறோம். தேவ தூதனை நோக்கி கர்த்தர் போதும் இங்கே உன் கையை நிறுத்து என்றார். எங்கே என்றால் அங்கே ஒருவன் போரடித்துக் கொண்டிருந்தான். ராஜா தெரியாமல் செய்துவிட்டார் அவரை மன்னிச்சிடுங்க என்றான். நாமும் இப்படி மன்றாடி ஜெபிக்கிற போது, போரடிக்கும் போது கர்த்தர் மலைகளை, குன்றுகளை அரண்களை அழித்து பதருக்கு ஒப்பாக்கி விடுவார். கர்த்தரும் நாமும் இணைந்து பெரிய ஜெயமெடுப்போம்.

## சீயோன் குமாரத்தியே கண்ணீர் விடு

நாம் கண்ணீர் விட வேண்டும். புல 2:18,19-ல் சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழியை சும்மாயிருக்க வொட்டாதே

எதற்காக மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு. இதில் கண்ணீர் விடு. எழுந்திரு. கூப்பிடு. ஊற்றிவிடு. ஏறெடு என்று நாம் செய்ய வேண்டிய காரியங்களை ஆண்டவர் சொல்லுகிறார். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கம்பீரத்தோடே அறுப்பார்கள். மாற் 9:24-ல் ஒரு தகப்பன் தன் மகனுக்காக இயேசுவிடம் வந்து ஜெபிக்கிறான். நீ விசுவாசிக்க கூடுமானால் எல்லாம் கூடும் என்று ஆண்டவர் சொன்னவுடனே விசுவாசிக்கிறேன் ஆண்டவரே என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடு சத்தமிட்டு சொன்னான். நாயீன் பட்டணத்து விதவை தன் மகன் மரித்துப் போய்விட்டான். இனி என்ன நடக்கப் போகிறது என்று கண்ணீரோடு அழுது கொண்டே போனாள். ஆனால் இயேசு மனதுருகி அவனை தொட்டார். இன்றைக்கு எது உங்கள் வாழ்க்கையில் மரித்து விட்டது இனி நம்பிக்கை இல்லை என்று அழுது கொண்டிருக்கும் எந்த காரியத்திலும் உயிர் பெறும் நம்பிக்கை உண்டு. நம் கண்ணீர் ஜெபத்திற்கு வல்லமை உண்டு. மெய்யாகவே தேவன் தம் ஜனத்தை சந்திப்பார். அவர் சந்தித்து விட்டால் சவுல் பவுலாக மாறுவான். கல்லறையில் உட்கார்ந்திருப்பவன் தெளிவு பெறுவான். 38 வருஷமாக படுக்கையில் இருப்பவன் சுகம் அடைவான். வெற்று படகு மீன்களால் நிரம்பும். சீயோன் குமாரத்தியே கண்ணீர் விடு. சங் 137:1-3 பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து சீயோனை நினைத்து அழுதோம். எங்களை சிறைப்பிடித்து போனவர்கள் எங்களை பாட சொல்லுகிறார்கள். எப்படி பாடுவோம் என்று அழுதார்கள். எப்படி இருந்தோம் இப்படி சிறைப்பட்டு போனோம் என்று சீயோன் ஆண்டவர் பிரசன்னத்திற்காக அழுதார்கள். நாமும் எதற்காக அழுதாலும் கண்ணீர் விட்டாலும் தேவன் நம் கண்ணீரை காண்கிறார். நமக்காக வருவார் நம்மை சந்தித்து அற்புதம் செய்வார்.

## சீயோன் குமாரத்தியே பாட்டுப்பாடு

நாம் செய்ய வேண்டிய காரியம் அடுத்ததாக பாட்டு பாடணும். சக 2:10 சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். தெய்வமாகிய கர்த்தரை நாம் பாடித் துதிக்க வேண்டும். சக 9:9-லும் நீ கெம்பீரித்துப் பாடினால் ராஜா உன்னிடத்தில் வருகிறார் என்று வாசிக்கிறோம். செப் 3:14-17 நாம் பாடித் துதிக்கும்போது ஆக்கினைகளை அகற்றி சத்துருக்களை விலக்கி இஸ்ரவேலின் ராஜா நம் நடுவில் வந்து தீங்கை காணாமல் நம்மை இரட்சிப்பார். நம்மில் மகிழ்ந்து களிகூறுவார். சங் 147:12,13 எருசலேமே கர்த்தரை ஸ்தோத்திரி. சீயோனே உன் தேவனைத்துதி. அவர் உன் வாசல்களின் தாழ்ப் பாள்களை பெலப்படுத்தி உன்னிடத்தில் உள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். நம் எல்லைகளை சமாதானமுள்ளவைகளாக்கி திருப்தியாக்குகிறார்.பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார், தாழ்பாள்களைப் பலப்படுத்தி பாதுகாக்கிறார். மோசேயும் மிரியாமும் மகிமையாய் வெற்றி சிறந்த கர்த்தரை துதித்து பாடினார்கள். கர்த்தாவே தேவர்களில் உமக்கொப்பானவர் யார் என்றார்கள். துதித்தால் சிறைச்சாலைகள் திறக்கும். விழி! விழி! தெபோராளே! பாட்டுப் பாடு சிறைப்படுத்தினவர்களை சிறையாக்கு! பவுலும் ஷீலாவும் பாடித் துதிக்கும்போது சிறைச் சாலை கதவுகள் திறந்து விலங்குகள் தகர்ந்தது. நம் வாழ்க்கையிலும் இந்தக் கட்டுகள் உடையும். கதவுகள் திறக்கும்.

## சீயோன் என்னும் சுவிசேஷகியே

பூமி முழுவதும் இருதயம் நொறுங்குண்டு கிடக்கும் மக்கள், கட்டுண்ட மக்கள் ஏராளம். ஏசா 40:9-ல் சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு, எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி, இதோ, உங்கள் தேவன் என்று கூறு. நாம் செய்ய வேண்டிய முக்கியமான வேலை சுவிசேஷம் அறிவிப்பது. பயப்படாமல் சத்தமிட்டு இதோ உங்கள் தேவன் என்று கூறு என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆண்டவர் கூப்பிட்டு சொல் என்ற போது என்னத்தை நான் சொல்வேன் என்று ஏசாயா சொல்லுகிறார். ஜனங்கள் பூவை போல புல்லை போல இருக்கிறார்கள். தேவனுடைய வசனமே நிற்கும் என்பதையே

சொல். இதோ உங்கள் தேவன் என்று கூறு. இயேசு ஜெப ஆலயத்தில் நுழைந்து ஏசாயா தீர்க்க தரிசன புத்தகத்தை வாசித்து லூக் 4:18,19 கர்த்தருடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார் தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது.

இதயம் நொறுங்குண்டவர்களை குணமாக்க. சிறைப்பட்டவர்களை விடுவிக்க. குருடருக்கு பார்வையை பிரசித்தம் பண்ண நொறுங்குண்டவர்களை விடுதலையாக்க கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தை பிரசித்தப்படுத்த என்னை அனுப்பினார் என்றார். லாசரு கல்லறையில் இருந்து வெளியே வந்தான். ஆனால் கட்டப்பட்டிருந்தான். கட்டவிழ்த்து அவனை போக விடுங்கள் என்றார். சிம்சோனை கட்டி இருந்த கட்டுகளை அவிழ்க்க ஆவியானவர் மகிமையாய் வல்லமையாய் அவன் மேல் இறங்கி வந்தார். நம்மை கட்டி இருக்கிற எந்த கட்டுகளையும் அவிழ்க்கிற ஆவியானவர் நம்மில் இறங்கி வந்து நம்மை கட்டவிழ்க்கிறார். நம்மை மட்டுமல்ல நாம் அறிவிக்கிற சுவிசேஷத்தால் மற்றவர்களையும் விடுவிக்கிறார். அதற்காகத் தான் நம்மை. அவர் யூதாவையும் சீயோனையும் தெரிந்து கொண்டார். அந்த நோக்கத்தை நிறைவேற்ற நம்மை அர்ப்பணித்து விடுவோம ஆண்டவர் தாமே சீயோனாக தெரிந்து கொண்ட நோக்கத்தை நம்மை கொண்டு நிறைவேற்றுவாராக

## சிறுவர் பகுதி

# சகேயு அண்ணனுக்கு கிடைச்ச சர்ப்ரைஸ் என்ன?

**ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?**

எரிகோ-என்கிற ஊர்ல சகேயு-னு ஒரு அண்ணன் இருந்தாங்க. அவங்க ரோம அரசாங்கத்துக்கு வரி வசூல் பண்ணும் அதிகாரியாக வேலை செஞ்சாங்க. ஒரு நாள் அவங்க ஊருக்கு இயேசப்பா வர்றாங்கனு கேள்விப்பட்டு அவரை பார்க்கனும்னு ஆசையா போனாங்க. ரொம்ப கூட்டமா இருந்ததால் அவரை பார்க்க முடியவில்லை. ஆனால் சகேயு அண்ணனுக்கு எப்படியாவது இயேசுவை இன்னைக்கு பார்த்தே ஆகனும்னு ரொம்ப ஆசையா இருந்துச்சு. அவர் வேற குள்ளமா இருந்தாரா. கூட்டத்துக்குள்ள இயேசப்பாவை எட்டியும் பார்க்க முடியவில்லை. அப்பத்தான் அந்த அண்ணனுக்கு ஒரு ஐடியா வந்துச்சு. என்ன தெரியுமா?. இயேசப்பா. பார்வை இல்லாத ஒருத்தருக்கு இப்பதான் பார்வை கொடுத்திருந்தாங்க. அங்கிருந்து கிளம்பி இந்த ரோடு வழியாய் தான் நிச்சயம் வருவாங்க. அதோ அந்தக் காட்டத்தி மரத்தில் நான் ஏறி நின்னா நல்லா கிளியரா இயேசுவை பார்த்திடலாம். யாரும் நம்மளை நெருக்கி. காலையெல்லாம் மிதிக்க மாட்டாங்க. யோசிச்சுகிட்டே சகேயு அண்ணன் எல்லாருக்கும் முன்னாடி ஓடி அந்த காட்டத்தி மரத்தில் ஏறி உட்கார்ந்துட்டாங்க. அண்ணன் உட்கார்ந்ததை யாருமே பார்க்கவில்லை. கொஞ்ச நேரத்தில் இயேசப்பாவும். அவருடைய சீஷர்களும். ஜனங்களும் சகேயு அண்ணன் நினைச்ச மாதிரியே அந்த மரத்திற்கு பக்கத்தில் நடந்து வந்தாங்க.



திடீர்னு இயேசப்பா அந்த மரத்திற்கு கிட்ட நின்னுட்டாங்க.
சகேயு அண்ணனுக்கு ஒரே சந்தோஷம். மரத்து மேலே இருந்து
நல்லா அவரை பார்க்கலாமென்று நினைத்துக்கொண்டு இருக்கும்
போது இயேசப்பா அண்ணாந்து பார்த்து சகேயுவே  நீ சீக்கிரமா இறங்கி வா.
இன்னைக்கு நான் உன் வீட்டிலே தங்கனும்னு சொன்ன உடனே சகேயு
அண்ணனுக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சு போச்சு. இயேசுவை பார்க்கனும்னு தான்
நினைச்சேன், ஆனால் அவர் என் வீட்டுக்கே வரேன்னு சொல்றாரே, சரி எப்படி என் பெயர்
அவருக்கு தெரிந்திருக்கும். என்றெல்லாம் நினைச்சுக்கிட்டே வேகமாய் மரத்தை விட்டு இறங்கி
இயேசுவை சந்தோஷமாய் வீட்டிற்கு கூட்டிட்டு போனாங்க.
இதைப் பார்த்த அந்த ஊர்க்காரங்க எல்லாம் இவன் லஞ்சம் வாங்கினவன் ஆச்சே.
பாவியான இவன் வீட்டுக்கு இயேசு போயிட்டுயிருக்கிறாரேனு எல்லாரும் பேசிகிட்டு இருந்தாங்க.
ஆனால் சகேயு அண்ணன் என்ன செஞ்சாங்க தெரியுமா? ஆண்டவரே நான் அநியாயமா
வாங்கின லஞ்சப் பணத்தை எல்லாம் நாலு மடங்காக திருப்பிக் கொடுத்துறேன். இனிமேல்
ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்வேன் என்று சொல்லி ஆண்டவர் கிட்ட தன்னுடைய
தவறையெல்லாம் சொல்லி திருந்துகிறேன்னு சொன்னாங்க. இயேசப்பா சகேயு அண்ணனைப்
பார்த்து உனக்கும், உன் வீட்டுக்கும் இன்னைக்கே விடுதலை வந்திருச்சு. இனிமே நீ பாவி
கிடையாது. நீ என்னுடைய பிள்ளை. உன் தவறுகளால் எல்லாரும் உன்னை வெறுத்தாலும்
நான் உன் பாவத்தை மன்னித்து உன்னை என் மகனாக ஏற்றுக் கொள்கிறேன். உன்னை
மாதிரி மக்களை விடுதலையாக்கவே நான் வந்திருக்கிறேன்னு சொன்னாங்க. இயேசுவை
பார்க்க நான் தேடிப் போனேன். ஆனால் இயேசு என்னையே தேடி வந்து சர்ப்ரைஸ்
கொடுத்துட்டாருன்னு சகேயு அண்ணன் இயேசப்பாவுக்கு நன்றி சொன்னாங்க.
இயேசப்பா பிள்ளையாய் வாழ்ந்தாங்க.

குட்டீஸ் உங்களையும், உங்கள் தவறுகளைச் சொல்லி திட்டுறாங்களா? வெறுப்பா
பேசுறாங்களா? கவலைப்படாதீங்க. உங்களுடைய நல்லதுக்கு சொல்லும்போது தப்பாக
எடுத்துக்காமல் தவறை திருத்திக்கோங்க. இயேசப்பாவுக்கும் அதுதான் பிடிக்கும். அண்ணன்
எப்படி திருந்திட்டாங்க பாத்தீங்களா? இயேசு அப்பாவை நீங்களும் தினமும் ஜெபத்திலே தேடுங்க.
வசனத்தை கேளுங்க, நீங்களும் சந்தோஷமாய் ஜாலியா இருக்கலாம். Ok Bye...

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா நான் செய்த தவறுகளை மன்னியுங்கப்பா. உங்களுக்கு பிடிக்காததை
இனிமே நான் செய்யாமல் இருக்க எனக்கு உதவி செய்யுங்க. எனக்கு இருக்கிற கெட்ட
பெயரை மாற்றிருங்க இயேசப்பா. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே
மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். லூக் 19:10



சாட்சி பகுதி

# வெட்கப்பட்ட இடத்தில் தலையை உயர்த்துகிறவர்.

**சகோதரர். ஜான்வில்லியம் - திருச்சி**

கடந்த ஆண்டில் என் மகன் Neet தேர்விற்காக ஆயத்தமானான். ஆனால் எதிர்பார்த்த அளவு மதிப்பெண் வராததால் மிகவும் சோர்ந்து போய் விட்டோம். இந்த நிலையில் தங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் மகனின் சோர்வுகள் நீங்கவும், மீண்டும் நம்பிக்கையோடு படித்து வெற்றி பெறவும் ஜெபிக்க சொன்னேன். தாங்கள் அவனுக்காக பாரத்தோடு ஜெபித்தீர்கள். இந்த ஆண்டில் அவன் எழுதிய Neet தேர்வில் வெற்றி பெறவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ கல்லூரியில் MBBS சீட் கிடைக்கவும் தேவன் கிருபை செய்தார். அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை என்ற தேவ வார்த்தையின்படி அவரை நோக்கிப் பார்த்த எங்களை தேவன் வெட்கப்பட்டுப் போகவிடவில்லை. எங்களுக்கு அற்புதம் செய்து சாட்சியாக வாழ வைத்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. கவிதா - ஒட்டன்சத்திரம்**

20 ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் வீட்டில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாத நிலையில், உறவுகளை இழந்து மனவேதனையில் நாங்கள் வாழ்ந்து வந்தோம். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் ஒரு தடை, தோல்வி தான் இருந்தது. இந்நிலையில் நாங்கள் வானத்தின் வாசல் ஜெபமையத்தைக் குறித்து கேள்விப்பட்டு அங்கு நடைபெறும் உபவாச ஜெபத்திற்கு நானும் அம்மாவும் வந்தோம். முதன் முறையாக நாங்கள் வானத்தில் வாசல் ஜெப மையத்திற்கு வந்து நுழைந்தவுடன் எங்கள் இருதயத்தில் தேவன் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தார். ஜெபம் முடிந்தவுடன் சகோதரி அவர்களிடம் எங்கள் குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிக்க சொன்னோம். சகோதரி அவர்களும் பாரத்தோடு ஜெபித்து கர்த்தர் உங்களுக்கு புதிய வழிகளையும், புதிய ஆசீர்வாதங்களையும் தந்து நடத்துவார் நம்பிக்கையோடு இருங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்து அந்த வார்த்தைகளைச் சொல்லி ஜெபித்தோம். பல வருடங்களாக வெறுமையாய் கிடந்த இரண்டு இடங்களில் போர் போடவும், சுரக்கும் நீரூற்றுக்கள் உண்டாகவும் தேவன் கிருபை செய்தார். தற்போது அந்த இடத்தில் வீடு கட்ட ஆரம்பித்திருக்கிறோம். வெட்டாந்தரையை வயல்வெளியாக மாற்றுகிற தேவன் எங்கள் வாழ்க்கையில் இருந்த வெறுமையை, வேதனையை, நிந்தையை அவமானத்தை மாற்றி மற்றவர்களுக்கு முன்பாக எங்கள் தலையை உயர்த்தினார். அவருக்கே எல்லா கனமும் மகிமையும் உண்டாவதாக.

## இயேசு வாழ்கிறார்
## ஊழியத்தோடு இணைந்து
## சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

## 3) காசோலை(CHEQUE):

JESUS LIVES TRUST
OR
L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY :

GPAY TO , 944 300 9333,

## 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ – காலனி பரவை ,
மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# தமிழகத்தில் பரவி வரும் இன்ஃப்ளூயன்ஸா வைரஸ்.!



தமிழகத்தை அச்சுறுத்தி வரும் இன்ஃப்ளூயன்ஸா வைரஸ் குறித்தும் அதிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்வதும் எப்படி என்பதை பார்ப்போம். இன்ஃப்ளூயன்ஸா எனப்படும் ஒரு வகை தொற்று நோய் அண்மைக்காலமாக தமிழகத்தில் பரவி வருகிறது. காலநிலை மாற்றம், மழை பாதிப்பு போன்ற காரணங்களால் கடந்த இரண்டு வாரங்களாக சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைரஸ் காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் பெரிதும் அச்சம் அடைந்துள்ளனர்.



2019-ம் ஆண்டு கொரோனா என்ற வைரஸ் தோன்றி உலக மக்கள் அனைவரையும் பீதியில் உரைய வைத்தது. அவ்வைரசால் லட்சக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டது. பின்னர் உடனடியாக அந்நோய் காண தடுப்பூசி கண்டறிந்து வைரசின் பிடியிலிருந்து மக்களை காப்பாற்றினர். அப்போதேயிலிருந்து வைரஸ் என்றாலே மக்கள் அச்சப்படுகின்றனர்.

தற்போது பரவி வரும் இன்ஃப்ளூயன்ஸா வைரஸிலிருந்து நம்மை எவ்வாறு தற்காத்துக் கொள்வது எப்படி?. தமிழக முழுவதும் மக்களை அச்சுறுத்துகின்ற இந்த இன்ஃப்ளூயன்ஸா வைரஸ் பரவி வருகிறது. இதனால் மக்கள் பெரிதும் அச்சமடைந்து வருகின்றனர். இது முற்றிலுமாக காற்றினால் பரவக்கூடிய ஒரு தொற்று வியாதி. இந்த இன்ஃப்ளூயன்ஸா வைரஸ் ஒருவர் உடலில் சென்று விட்டால், தொடர் காய்ச்சல், இருமல், தொண்டை வலி, தசை வலி மற்றும் மூக்கு ஒழுகுதல் ஆகிய அறிகுறிகள் தென்படும்.

இந்நோய் தொற்று மூன்று முதல் ஏழு நாட்கள் வரையும் தொடர்ந்து நோய் தாக்கம் இருக்கும். இத்தகைய அறிகுறிகள் உடம்பில் தென்பட்டால் அருகாமையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகலாம். இவ்வகை நோய் தொற்று மக்களிடையே எவ்வாறு பரவுகிறது என்றால், இரும்பும் பொழுதும், தும்மும் பொழுதும், முக கவசம் அணியாமல் அருகாமையில் பேசும்பொழுது, ஒருவர் பயன்படுத்திய பொருட்களை கையாளும் பொழுதும், உமிழ் எச்சிலிலும் பரவுகிறது. இந்த வகை நோய் தொற்று வயதானவரையும், கர்ப்பிணிகளையும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களையும் இவ்வகை வைரஸ் எளிதாக தாக்குகிறது.

பெரும்பாலும் கால் நிலை மாற்றத்தால் இவ்வகை நோய் தொற்று பரவுகிறது. தற்போது கோடை காலம் நிறைவடைந்து குளிர்காலம் துவங்கியிருப்பதாலும், தொடர் மழை பெய்து வருவதாலும் இத்தகைய நோய் பரவல் எளிதாக வருகிறது. இதற்காக மக்கள் எந்தவித அச்சமும் கொள்ள வேண்டாம். இது இயல்பான ஒன்றுதான். முடிந்தவரை பொதுவெளியில் முக கவசம் அணிந்து செல்ல வேண்டும்'

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS, No:10, Theekkathir Nagar, Milakaranai,Alanganallur Main Road, Madurai -625 018.


Jesus Lives MINISTRIES
திருச்சியில்
அக்டோபர்
20
திங்கட்கிழமை
அரசு விடுமுறை
காலை 9:30 AM முதல்
மதியம் 2:00 PM வரை
குடும்ப ஆசீர்வாத கூட்டம்
இடம்:
ஸ்வார்ட்ஸ் ஹால், வெஸ்ட்ரீ ஸ்கூல், MAX கடையின் எதிரில்,
கலெக்டர் ஆபீஸ் ரோடு, திருச்சி-620001
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449
LIVE
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
நம்பிக்கையின் இரவு
அக்டோபர்
31
வெள்ளிக்கிழமை
இரவு 10:30 PM முதல்
12:30 AM வரை
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள்
மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது.
செப்டம்பர் 29ஆம் தேதிக்குள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் 94428 00449

RNI NO .TNTAM/2000/00621




TO

If Undelivered (Please Return To)

YESUVAI THINAM PARKIREN

54,A.I.B.E.A Nagar,Paravai

Madurai-625402

South India.